DINAKARAN

PAGE NO: 14 DATE: 04.04.23

# தமிழ் பயில்வதில் கர்வம் கொள்ள வேண்டும்

## துணைவேந்தர் குர்மீத்சிங் பேச்சு

புதுச்சேரி, ஏப். 4: புதுவை பல்கலைக்கழகத்தில் சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம் மற்றும் ஆனந்தரங்கப்பிள்ளை நூலகம் சார்பில் 'ஆனந்தரங்கப்பிள்ளை அறக்கட்டளைச் சொற்பொழிவு' தமிழியற்புலத்தில் நடைபெற்றது. இதில் புதுவை பல்கலைக்கழக துணை வேந்தர் குர்மீத்சிங், பல்கலைக்கழக நூலகர் விஜயகுமார், அறக்கட்டளை நிறுவனர் ஆஷா ஆனந்தரங்க ரவிச்சந்தர், புலமுதன்மையர் பேராசிரியர் சந்திரிகா, அறக்கட்டளை ஒருங்கிணைப்பாளர் ரவிக்குமார், சிறப்பு விருந்தினராக பேராசிரியர் ராஜேந்திரன் மற்றும் பேராசிரியர் சிலம்பு நா.செல்வராசு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

துணைவேந்தர் பேசுகையில், உலகின் பழமை வாய்ந்த மொழிகளுள் ஒன்றான தமிழை பயில்வதில் கர்வம் கொள்ளவேண்டும். தமிழ் பண்பாட்டையும் தமிழ் மரபையும் நெஞ்சு நிமிர்த்தி பரவ செய்து வெளியுலகில் பறைசாற்ற வேண்டும். பதினெட்டாம் நூற்றாண்டின் வரலாற்றையும் பண்பாட்டையும் முழுமையாக அறிந்துகொள்ள ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு துணைசெய்கிறது என்றார். பின்னர் அழகப்பா பல்கலைக்கழகத்தின் மேனாள் துணைவேந்தர் பேராசிரியர் ராஜேந்திரன் பேசினார். தமிழ்மணி தமிழில் நூலாக்கம் செய்த 'ஆனந்தரங்க விஜய சம்பு' என்னும் நூல் மற்றும் ரவிக்குமார் தொகுத்த 'ஆனந்தரங்கர் நாட்குறிப்பு-ஒரு வரலாற்றுப் புதையல்' என்னும் நூலினையும் துணைவேந்தர் குர்மீத்சிங் வெளியிட்டார். இரண்டு நூல்களையும் மதிப்பீடு செய்து, தாகூர் கலைக் கல்லூரியின் முன்னாள் முதல்வர் பேராசிரியர் இளங்கோ உரை நிகழ்த்தினார். பின்னர் மாலையில் நடந்த கருத்தரங்கில் பேராசிரியர் சிலம்பு செல்வராசு தலைமை பேராசிரியர் கருணாநிதி, பேராசிரியர் ஸ்ரீவித்யா ஆகியோர் ஆனந்தரங்கர் நாட்குறிப்பின் சிறப்புகளை எடுத்துரைத்தனர். இதில், ஆனந்தரங்கர் எழுதிய நாட்குறிப்பின் நூற்தொகுதிகளும் அரிய ஆவணங்களும் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன. பல்கலைக்கழக பேராசிரியர்கள், முனைவர் பட்ட ஆய்வாளர்கள், முதுகலை மாணவர்கள், தமிழ் ஆர்வலர்கள் கலந்து கொண்டனர்.

DINAKARAN

4 APR 2023

PAGE 14

# புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் வணிக திருவிழா




புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் மூன்று நாள் வணிக திருவிழா நடந்தது.

**புதுச்சேரி, ஏப். 4:** புதுச்சேரி பல்கலைக்கழக சமுதாய கல்லூரியில் வணிகவியல் துறை சார்பில் மூன்று நாள் வணிக திருவிழா நடந்தது. துவக்க விழாவில் வணிகவியல் துறை தலைவர் பாண்டு வரவேற்றார். கல்லூரி முதல்வர் லலிதா ராமகிருஷ்ணன் தலைமை தாங்கினார். புதுவை பல்கலைக்கழக மேலாண்மை துறை புலமுதன்மையர் மாளவிகா தியோ, வணிகவியல் துறை தலைவர் நடராஜன், எம்எஸ்எம்இ தொழில்நுட்ப மைய தலைவர் அமித் நைன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். ஆம்பூர் ஆர்ஷீஸ் நிர்வாக இயக்குநர் சந்தீப் ரெட்டி கலந்து கொண்டு புதிய தொழில் தொடங்குவோருக்கான பயிற்சியை வழங்கினார். தர்ம செல்வம் தலைமையில் எம்எஸ் எம்இ தொழில் மையம் மூலம் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. இதில் 200க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

விழாவின் முதல் நாளில் வணிக கோலம் மற்றும் பயிற்சி பட்டறை நடத்தப்பட்டது. 2ம் நாளில் புதிய தொழில் தொடங்குதல், மாதிரி வணிக நிறுவனங்கள், வினாடி வினா, வார்த்தை உச்சரிப்பு, சிறந்த மேலாளர் போன்ற போட்டிகள் நடத்தப்பட்டன. 3ம் நாளில் மாதிரி வணிக நிறுவனங்கள் வர்த்தக விளம்பர நடிப்பு மற்றும் வணிக இணைப்பு போன்ற நிகழ்வுகள் நடந்தன.

இதன் நிறைவு விழாவில் புதுவை பல்கலைக்கழக கலை புலத்தின் கல்வி நிலைய துறை தலைவர் ஸ்ரீதரன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

"MALAI MALAR"

PAGENO: 02

DATE: 04.04.23




# சமுதாய கல்லூரியில் 3 நாள் வணிக திருவிழா

புதுச்சேரி, ஏப்.4—

புதுவை பல்கலைக்கழக சமுதாய கல்லூரி வணிகவியல் துறை சார்பில் 3 நாள் வணிக திருவிழா நடந்தது.

துறை தலைவர் பாண்டு வரவேற்றார். கல்லூரி முதல்வர் லலிதா தலைமை வகித்தார். பல்கலைக்கழக மேலாண்மையியல் துறை புல முதன்மையர் மாளவிகா தியோ உரையாற்றினார். பேராசிரியர் நடராஜன், ஆம்பூர் ஆர்சீஸ் நிர்வாக இயக்குனர் சந்தீப்ரெட்டி நோக்க உரையாற்றினார்.

எம்.எஸ்.எம்.இ. தொழில்நுட்ப மைய தலைவர் அமித்நைன் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார். ஐக்கியநாடுகள் வளர்ச்சி அமைப்பின் இலக்காக உள்ள தரமான வேலை, பொருளாதார வளர்ச்சி, தொழில், புத்தாக்கம், உள்கட்டமைப்பு எட்டுவது குறித்து விளக்கப்பட்டது. சமுதாய கல்லூரி மாணவர்களோடு பிற கல்லூரி மாணவர்கள் 200—க்கும் மேற்பட்டோர் பங்கேற்ற பயிற்சி முகாம் நடந்தது.

நிறைவு விழாவில் துறை தலைவர் பாண்டு வரவேற்றார். பல்கலைக்கழக நிகழ்கலை புல பேராசிரியர் சிரிதரன் சிறப்புரையாற்றினார்.